# தேசிய கணக்காய்வு : ஆய்வுக் குறிப்பு

## குறிக்கோள்கள்:

கணக்காய்வுச் சேவை, ஆணைக்குழுவின் தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளுக்கும்; தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும்; பகிரங்க நிதிமீது கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பங்களிப்பைக் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடையங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## கணக்காய்வாளர் நாயகத்தின் வகிபங்கு:

கணக்காய்வாளர் நாயகமானவர் அரச திரட்டு நிதியத்திலிருந்தான எல்லாச் செலவினங்களையும் கணக்காய்வு செய்தல்வேண்டும். செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட உருப்படிகள் அவை எந்தச் சேவைகளுக்காக அல்லது நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அல்லது சட்டமுறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதனை பரிசோதிப்பதற்கு கணக்காய்வாளர் நாயகம் ஏதும் ஆவணங்களையோ கணக்கேடுகள் அல்லது புத்தகங்களை பெற்றுக்கொள்ள முடியும். இவர் பிரதான கணக்காளரிடம் வினாக்களையும் கேட்கமுடியும். அத்துடன் வேறுபட்ட நிறுவனங்களின் நிதியறிக்கைகளையும் பரிசீலிக்கமுடியும்.

## நோக்கம்:

கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்குகள், நிதி, நிதியியல் நிலை பொது சொத்துக்கள் நிதி முகாமை போன்றவற்றை பரிசீலனைக்கு உட்படுத்முடியும்.

## கணக்காய்வு நியமங்கள்:

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட் கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு நியமங்கள்.

## கணக்காய்வாளர் நாயகம் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்டவரின் கடமைகள்

- தகுதிவாய்ந்த கணக்காய்வாளரை அல்லது தொழில்நுட்ப நிபுணத்துவத்தைக் கொண்ட எவரேனும் ஆளை நியமித்தல்.
- கணக்காய்வு நிதியத்தை நிர்வகித்தல்
- பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல்